## சென்னை மாநகரில் பலத்த மழை!

# நள்ளிரவில் நனைந்தபடியே ஆய்வு செய்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்!

## வீடுகள்தோறும் சென்று பாதிப்புகளைக் கேட்டறிந்து நலஉதவிகளை வழங்கினார்!







கனமழை காரணமாக சென்னையின் பல்வேறு இடங்களில் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் இரவு மழைநீர் தேங்காமல் இருக்க சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, மயிலை முசிறி சுப்பிரமணியம் சாலையில் ஆய்வு செய்தார். மேலும், கன மழை முன்னெச்சரிக்கைப் பணியில் ஈடுபட்டு வரும் பணியாளர்களை நேரில் சந்தித்து அவர்களுக்கு சிற்றுண்டிகளை வழங்கினார். அங்கு நடைபெறும் பணிகளுக்கு, இடையூறு ஏற்படாத வகையில் மழைநீரை விரைவாக அகற்றிடுமாறும் பணியாளர்களை துணை முதல்வர் கேட்டுக் கொண்டார்.






சென்னை மாநகரம் முழுவதும் கன மழை பெய்து வரும் சூழலில், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, ஜி.பி.சாலை பகுதியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். மேலும் துணை முதல்வர் அவர்கள் வழக்கமாக தண்ணீர் தேங்குகிற பகுதிகளில் ஒன்றாக அடையாளம் காணப்படுகிற, ஜி.பி.சாலையில் மாநகராட்சிப் பணியாளர்கள் முழு வீச்சில் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை நேரில் சந்தித்து சிற்றுண்டிகளை வழங்கி அவர்களை உற்சாகப்படுத்தியதுடன் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்வையிட்டு, நீர் தேங்காமல் இருக்க அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.









சென்னையின் பல்வேறு இடங்களில் கனமழை பெய்து வரும் நிலையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, பள்ளிக்கரணை மற்றும் கோவிலம்பாக்கம் இடையே உள்ள நாராயணபுரம் ஏரியின் கரையோரத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்ததுடன் நாராயணபுரம் ஏரியின் கரைப்பகுதி பலப்படுத்தப்பட்டுள்ள விதம் குறித்து ஆய்வு செய்து, மழை நீர் ஏரிக்கு வந்து சேருகிற வழித்தடங்கள் தூர்வாரப்பட்டுள்ள விதம், கரைகளின் தன்மை உள்ளிட்டவைக் குறித்து அதிகாரிகள் – அலுவலர்களிடம் கேட்டறிந்தார். மேலும் நாராயணபுரம் ஏரிக்கு, கீழ்க்கட்டளை ஏரியில் இருந்து உபரிநீர் வரும் கால்வாயை அம்பேத்கர் சாலையில் இருந்து ஆய்வு செய்ததுடன் அப்பகுதியில் பொதுமக்களைச் சந்தித்து, அவர்களுடைய கோரிக்கைகள் – கருத்துகளைப் பெற்று அவற்றின் மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு அதிகாரிகளுக்கு ஆலோசனைகளை வழங்கினார்.